கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 09-02-2024**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-02-09 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-02-10 | 2024-02-11 | 2024-02-12 | 2024-02-13 | 2024-02-14 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 35.0 | 36.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 21.0 | 22.0 | 22.0 | 22.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 10 | 8 | 8 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 70 | 90 | 90 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 1 | 3 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

பிப்ரவரி 10,11,12,13,14 தேதிகளில் வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35 முதல் 36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 முதல் 23 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 90 விழுக்காடாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.காற்றின் வேகமானது மணிக்கு 8 முதல் 10 கி.மீ வரை வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 14 முதல் 20 பிப்ரவரி , 2024 வரை மழை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட குறைவாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும் காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலைகாரணமாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்போது கண்காணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பூக்கும் நிலையில் உள்ள காய்கறிப்பயிர்களுக்கு 1.5% பிபிஎஃப்எம் (Pink Pink-Pigmented Facultative Methylotrophs) இலை வழியாக தெளிக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர் பாசனம் செய்ய வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெல் வயல்களில் 1% பிபிஎப்எம் தெளிக்க வேண்டும். மேலும் நைட்ரஜனை நிலைப்படுத்துவதற்கு அசோலா இட வேண்டும். இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% sc @ 6 மி.லி / 10 லிட்டர் தண்ணீர் அல்லது பைபிரினில் 2 மி.லி /லிட்டர் கலந்து தெளிக்கவேண்டும். |
| நிலக்கடலை | நிலக்கடலையில் பூவை தக்க வைக்கவும், நெற்று நிரப்பவும் மற்றும் வறட்சியை தாங்கும் தன்மையை அதிகரிக்கவும் விதைத்த 35 ம் நாள் ( 50 % பூக்கும் சமயத்தில்) மற்றும் 45ம் நாள் ( காய் முற்றும் பருவம் ) இரண்டு தெளிப்பாக நிலக்கடலை ரிச் ஏக்கருக்கு 2 கிலோ (ஒவ்வொரு தெளிப்பிற்கும் ) வீதம் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 1 கிலோ / ஏக்கர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி /லிட்டர் ஊற்ற வேண்டும். |
| கத்திரிக்காய் | கத்தரியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கத்தை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 0.3மி.லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடைகளை வெளிப்புற ஒட்டுண்ணிகளான உண்ணி மற்றும் பேன் போன்றவை தாக்காமல் இருக்க மருந்து குளியல் கொடுக்க வேண்டும். |
| வெள்ளாடு | சிறிய குட்டிகளை இரவில் தனியறையில் கதகதப்பான வெப்ப நிலையில் வைத்து பராமரிக்க வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | குளிர்ச்சி காரணமாக கோழி மற்றும் கோழிக்குஞ்சிகளில் சளி ஏற்பட்டால் சிகிச்சையாக என்ரோசின் பி.ஹெச் (ENROCIN BH ) என்ற மருந்தை ஒரு லிட்டர் குடிநீரில் 1 மி.லி வீதம் நான்கு நாட்களுக்கு தரவேண்டும். |